# R 5417 (page 77)

# சீரான மனநிலையை அடைவதன் முக்கியத்துவம்

## THE IMPORTANCE OF ATTAINING BALANCE OF MIND

"உங்கள் செயல்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது" – 1கொரிந்தியர் 16:14.

தேவன் இரக்கம் மற்றும் அன்பின் சொரூபியாயிருக்கிறார். "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. மேலும் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பவர்கள் அவருடைய சாயலில் வளருகிறவர்களாக அன்பின் பிள்ளைகளாயிருப்பர். அப்.யோவான் கூறுகிறபடி, "அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" – 1யோவா4:16. நாம் எந்தளவுக்கு புது சிருஷ்டிகளாக உறுதியான குணாதிசயங்களில் வளர்கிறோமோ, அந்தளவுக்கு அன்புசெய்கிற பண்பு வளருவதாயிருக்கிறது. கூடுதலாக, நம்முடைய நிதானிப்பும் மிகவும் துல்லியமானதாக இருப்பதையும் காண லாம். கர்த்தருடைய ஆவியில் வளர்ந்தவர்கள் முன்பிருந்ததைவிட மேலான நிதானிப்பை உடையவர்களாயிருக்கின்றனர். நாட்கள் செல்லச்செல்ல உலக ஜனங்கள்மேல் எவ்வாறு சிறந்தமுறையில் இரக்கமாயிருப்பது என அறிவர். மேலும் அவர்கள் உன்னதத்திலிருந்து வரும் ஞானத்தை அதிகதிகமாக பெறுவர்.

### இராஜ்யத்திற்காக கவனமாக தயாராகுதல் அவசியமானது

நாம் கிறிஸ்துவர்களாக ஆவதற்கு முன்பு, நாம் நம்முடைய குடும்பத்தாரிடம் அல்லது நண்பர்களிடம் எவ்வாறு முறையாகப் பழகுவது என்பதில்கூட குறைவான அல்லது அதிகமான சமச்சீரற்ற மனநிலையை உடையவர்களாயிருந்திருக்கலாம். அல்லது இரக்கம் மற்றும் அனுதாபத்தினால், அவர்களுக்கு பணம் தருவதோ அல்லது அவர்களுடைய நன்மதிப்பைப் பெறும் மனநிலையை உடையவர்களாகவோ இருந்தாலும் அது அவர்களை காயப்படுத்தும் விதமாக இருக்கும். அல்லது நாம் இன்னும் கடுமையான மற்றும் இறுக்கமான மனநிலையில் இருந்திருக்கலாம். ஆனால் தெளிந்த புத்தியின் ஆவியில் நாம் வளரும்போது, தெய்வீக சித்தத்திற்கும், தேவஆவிக்கும் இசைவான முறையில் சிறந்தமுறையில் பழக கற்றுக்கொள்வோம்.

நம்முடைய மாறுதலை அடைந்து, நம் மீட்பரைப்போல் சாயலடையும்பொழுது, நம் எல்லா வல்லமைகளும் பூரணமானதாயிருக்கும். நம்முடைய அன்பு, நீதியைக் குறித்தான நம்முடைய புரிதல், மற்றவர்களோடு எவ்வாறு பழகுவது என்பதில் நம்முடைய புரிதல் போன்ற அனைத்தும் அப்பொழுது பூரணமானதாயிருக்கும். இம்மாதிரியாக அன்பு, இரக்கம், நீதி போன்ற குணாதிசயங்களில் முன்னேறாத ஒவ்வொருவரும் இராஜ்யத்தின் வேலைக்காக தங்களை தயாா்ப்படுத்தவில்லை.

அடுத்த யுகமானது உலகத்தை சுத்திகரித்தல் மற்றும் தூய்மையாக்குதலுக்கான காலப்பகுதியாகும். அவசியமான சிட்சைகளை தற்காலத்தில் கொடுக்கமுடியாதபடி குணமுடைய தேவனுடைய பிள்ளைகள், அவர்கள் எந்த பதவியிலிருந்து அதை செய்யவேண்டுமோ அந்த பதவிக்கு தகுதியுடையவரல்ல. இன்னொருவகையில், கூடுதலான அல்லது அளவுக்கு அதிகமான சிட்சைகளை தருகிறவர்களும் மனுக்குலத்தை வழிநடத்த பொருத்தமானவர்களல்ல. எனவே வரவிருக்கின்ற யுகத்தின் வேலைகளுக்கு தயாராகும்பொருட்டு நமக்கு இந்த சமச்சீரான மனநிலை தேவைப்படுகிறது.

### கோபத்திற்கான முறையான மற்றும் முறையற்ற தருணங்கள்

ஆதாமின் முழு சந்ததியும் விழுந்துபோன நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை நாம் காணும்போது, அதாவது சிலர் அதிகளவிலும் சிலர் சிறிய அளவிலும் விழுந்துபோயிருக்கிறார்கள் என நாம் காணும்போது, மனுக்குலத்தின்மேல் நம்முடைய விசாலமான பரிவிரக்கமானது வளரவேண்டும். நாம் கருணை உள்ளத்தை வளர்க்கவேண்டும். அவர்களுடைய சீரழிவிலிருந்து அவர்களை தூக்கியெடுக்க விருப்பமுள்ளவர்களாயிருக்கவேண்டும். எந்தளவு வாய்ப்பளிக்கப்படுகிறதோ அந்தளவுக்கு நாம் அவர்கட்கு உதவிடவேண்டும். இதன் காரணமாக நாம் தீமைக்குத் தீமை செய்வதிலிருந்து தூரமாக விலகியிருக்க விரும்புவோம். நம்மால் முடிந்தளவு சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க நாடுகிறோம். எனவே கடிந்துகொண்டு கண்டனம் பண்ணுவதிலிருந்து விலகியிருந்து அநீதி செய்யாதபடி பார்த்துக்கொள்ளும் அதேவேளையில், இரக்கமும் அன்புடையதுமாக நம்முடைய வார்த்தைகள் இருப்பதில் கவனமாகஇருக்கவேண்டும். இருந்தபோதிலும், நம்முடைய வார்த்தைகள் கோபமான வார்த்தைகளாக இல்லாவிடினும், சிலசமயங்களில் துல்லியமான, கண்டிப்பான வார்த்தைகள்

உதவிகரமாயிருக்கும். ஆனாலும் அவ்வார்த்தைகள் அன்பின் மனநிலையாகிய கர்த்தருடைய ஆவியின் மனநிலையாயிருக்கவேண்டும்.

## கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்

நீதியான கோபத்திற்கும், அன்பில்லாத, இரக்கமில்லாத, அநீதியான கோபத்திற்கும் வித்தியாசமுள்ளது. நாம் அறிந்தபடி தேவன் துன்மார்க்கர்மேல் கோபமுள்ளவராயிருக்கிறார் என வேத வாக்கியங்கள் கூறுகின்றன(சங் 7:11). எனவே கோபமானது பாவநிலையை மட்டும் அவசியம் குறிக்கவேண்டுமென்பதில்லை என்ற உண்மையை காண்பிக்கிறது. ஏனெனில் தேவனிடத்தில் பாவமென்பதில்லையே. மேலும் தம் சிருஷ்டிகளை எந்த சட்டதிட்டங்களின்படி நியாயந்தீர்க்கிறாரோ அவைகளின்படியே தம்மையும் நியாயந்தீர்த்துக் கொள்கிறவராயிருக்கிறார். எனவே கோபமானது தனக்குள்ளாக பாவமுடையதாயிருக்கவில்லை. தேவனுடைய விஷயத்தில் அவர் தவறிழைப்பார் என்கிற ஆபத்தே இல்லை. என்னவெனில் சரியானவற்றைக் குறித்து கோபம் கொள்வதோ அல்லது தப்பிதங்களை ஏற்றுக்கொள்ளுவதோ அல்லது தவறான காரியங்களுக்கு வளைந்து கொடுப்பதோ அல்லது சரியானவற்றை எதிர்ப்பதுபோன்ற தவறுகளை இழைக்கமாட்டார். அவருடைய ஞானம் பரிபூரணமானதால் அவருடைய நடவடிக்கைகளும் பரிபூரணமானவைகளே. ஆனால் நம்முடைய விஷயத்தில் கோபமானது நமக்கு முறையான ஒன்று என எண்ணுவோமானால், அதை நாம் மிகுந்த விவேகத்தோடு அல்லது முன்ஜாக்கிரதையோடு பயன்படுத்தவேண்டும். அப்.பவுல் கூறுகிறபடி, "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள" – எபே4:26.

ஒருவேளை ஒரு அப்பாவி சகோதரன் தவறினதினால் பாடுபட்டால், அத்தவறைப்பற்றி நாம் முழுமையாக தெரிந்திருக்கும் பட்சத்தில், அச்சமயத்தில் நீதியான கோபத்தை வெளிப்படுத்துவது நமது கடமையாயிருக்கிறது. ஒரு வாயில்லா ஜீவன் கொடுமைப்படுத்தப்படுவதை நாம் கண்டால், ஒரு குறிப்பிட்ட அளவு கோபத்தைவெளிப்படுத்துவது முறையானதாக இருக்கும். நீதியின் கொள்கைகளானது வெறுக்கப்படுவதை நாம் கண்டால் கொஞ்சம் கோபத்தை வெளிப்படுத்துவது அவசியமானதாக இருக்கலாம்.

ஆனாலும் இம்மாதிரியான காரியங்கள் மிகவும் அரிதான ஒன்றாக இருக்கவேண்டும். எவ்வாறெனில், சூழ்நிலைகள் பெரும்பாலும் நமது வேலைக்குட்ட காரியமல்ல. அப்.பேதுரு குறிப்பிடுவதுபோல, அந்நிய காரியங்களில் தலையிட்டு பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது – 1பேது 4:15.

ஒரு பெற்றோர் அவருடைய பிள்ளைக்கு நியாயமற்ற காரியத்தை செய்ய நாம் கண்டால், அக்குழந்தையின் ஜீவனுக்கு ஆபத்தில்லாதவரை நாம் தலையிடக்கூடாது. அது வெறுமனே கிள்ளுவதோ அல்லது காதை திருகுவதாக இருந்தால், நாம் அதில் தலையிடக்கூடாது. அது நம்முடைய வேலையும் அல்ல. கர்த்தருடைய பிள்ளைகளாக, பரலோக இராஜாவின் ஸ்தானாதிபதிகளாக, தெளிந்தபுத்தியின் ஆவியையும், அன்பின் ஆவியையும், நியாயத்தன்மையையும் அதிகமதிகமாகத் தேடுவோமாக!

-------------------------